
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1063

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

42

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# இரட்டை வேடங்களை வெளுத்த வண்டிக்காரன் மகன்!

1978-ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம், 'வண்டிக்காரன் மகன்'. பேரறிஞர் அண்ணா எழுதிய ஒரு சிறுகதைக்கு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி, அமிர்தம் இயக்கிய படம். பூம்புகார் புரொடக்‌ஷன்ஸ் நிறுவனம் சார்பில், முரசொலி செல்வம் தயாரிப்பில் வெளியானது. ஜமீன்தாரின் சாதி ஆதிக்கம் மற்றும் வர்க்கத் திமிரால் பாதிக்கப்படும் ஏழை வண்டிக்காரன் மகன், எதிர்த்துப் போராடி பழிவாங்கும் கதையைச் சொன்ன திரைப்படமாகும்.

### படத்தின் கதை

ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதி (கே.ஏ.அசோகன்) உள்ளுக்குள் கொடுங்கோலராக இருந்துகொண்டு வெளியே ஏழைப் பங்காளராக இரட்டை வேஷம் போட்டு மக்களை ஏய்த்தும் ஒடுக்கியும், சுரண்டியும் பெண்களைச் சீரழித்தும் வருகிறார். தனது ஆட்சி எல்லைக்குள் சாராய வாடையே ஆகாது என்று கூறும் அவர், தனது மாளிகையில் போதையில் மிதக்கிறார். தேவாலயத்துக்கு தேவி தரிசனத்துக்குப் போகிறேன் என்று சொல்லிப் போகும் அவர், அங்கு மறைவிடத்தில் பெண்களுடன் சல்லாபத்தில் ஈடுபடுகிறார்.

இதற்கெல்லாம் கையாளாக மானேஜர் காளிங்கன் (எம்.ஆர்.ராதா) இருக்கிறார். ஜமீன்தாருடன் உறவில் இருக்கும் பெண்களில் எவராவது கர்ப்பமானால், அவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ள ஆசைப்பட்டால், அவர்களைத் தீர்த்துக் கட்டிவிடுகிறார். அவ்வாறு அவரால் கர்ப்பமாகி, அவரால் கொல்லப்பட முடியாமல் தப்பும் ஒரே பெண்ணான மரகதம் (மனோரமா) ஜமீன்தாரின் மகள் உமாவின் (ஜெயசித்ரா) வளர்ப்புத் தாயாகவும் ஆசிரியராகவும் ஜமீன் மாளிகையிலேயே வசிக்கிறார். அவருக்கும் ஜமீன்தாருக்கும் பிறந்த பெண் கோகிலா (ரோஜா ரமணி), உமாவின் நெருங்கிய தோழியாக உள்ளார்.

ஜமீன்தாரின் வண்டிக்காரராகவும் குதிரை லாயத்தைப் பராமரிப்பவராகவும் சடையன் (எஸ்.வி.சுப்பையா) அவரது மனைவி சொர்ணம், மகன் சிறுவன் சொக்கலிங்கம் (ஜெய்சங்கர்) ஆகியோர் ஜமீன் மாளிகை அருகே ஒரு குடிசையில் வசிக்கின்றனர்.

### ஊருக்குத்தான் உபதேசமா?

ஒருநாள், ஜமீன்தார் மகள் உமாவும் மற்ற சிறுவர்களும் 'கல்யாண விளையாட்டு' விளையாடுகின்றனர். அப்போது, மணப் பெண்ணாக உமாவையும் மணப்பையனாக சொக்கலிங்கத்தையும் அமர வைத்து விளையாடு கின்றனர். சொக்கலிங்கம் உமாவுக்குத் தாலி கட்டப் போகும்போது ஜமீன்தார் வந்து பார்த்துவிட்டு, கோபத்தோடு குழந்தைகளை அடித்து விரட்டுகிறார். உமாவின் கழுத்தில் தாலி கட்டச்சென்ற சொக்கலிங்கத்தின் கைகளை முறிக்க முயல்கிறார்.

இதனைப் பார்க்கும் சொக்கலிங்கத்தின் தாயார் வந்து, 'குழந்தைகள் விளையாட்டுத் தனமாகச் செய்ததைப் பெரிதுபடுத்த வேண்டாம் விட்டுவிடுங்கள் எஜமான்' என்று கெஞ்சுகிறார். ஆனால், ஜமீன்தார் விடுவதாக இல்லை. சிறுவன் சொக்கலிங்கத்தைத் தாக்குகிறார். தடுக்கும் சொர்ணத்தையும் தாக்குகிறார். அப்போது சொர்ணம், 'எஜமான் ஊருக்குத்தான் உபதேசமா? கூட்டத்திலே ஒரு ஜமீன்தார், குதிரை லாயத்திலே வேறு ஒரு ஜமீன்தார்! சாராயத்தைக் குடித்துவிட்டு வந்து அடிக்கிறீர்களா?' என்கிறாள்.

ஆகா, தன்னைப் பற்றிய உண்மையைச் சொர்ணம் தெரிந்துகொண்டுவிட்டாளே, இனி இவளை உயிரோடு விடக்கூடாது. என்று நினைத்து, தோட்டத்தில் நிற்கும் காளைமாட்டின்மீது சொர்ணத்தை ஜமீன்தார் தள்ளிவிட, காளைமாடு அவளைக் குத்திக் கொன்றுவிடுகிறது. அப்போது சடையன் அங்கு வர, உடனே ஜமீன்தார், 'காளை மாட்டின் பக்கம் யாரும் போக வேண்டாம் என்று சொன்னேனே சடையா, உன் மனைவி காளையின் அருகில் போனதும் அது குத்திக் கொன்றுவிட்டதே' என்று நடிக்கிறார்.

சடையன் மற்றும் ஊர் மக்களின் நன்மதிப்பை சம்பாதித்துக் கொள்கிறார்.

ஜமீன்தாரைப் பழிவாங்கத் திட்டமிட்ட லிங்கன் ஏமாந்துபோகிறான். அடுத்து ஜமீன்தார், தனது தானிய களஞ்சியத்தில் பதுக்கிவைத்து கள்ளத்தனமாக விற்கும் நெல் மூட்டைகளை, மக்களுக்கு எடுத்துத் தருகிறேன் என்று சொல்லி, லிங்கன் மக்களை அழைத்துச் செல்கிறான். ஆனால், ஜமீன்தார் முந்திக் கொண்டு, களஞ்சியத்தின் வாசலில் நெல் மூட்டைகளை அடுக்கிவைத்து காளிங்கன் மூலமாக, ஜமீன்தாரின் பிறந்த நாளை முன்னிட்டு மக்கள் அனைவருக்கும் இலவசமாகத் தானியங்களை வாரி வழங்குகின்றார். இதனால், ஜமீன்தாரின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கிறது. அப்போதும் லிங்கன் ஏமாந்து நிற்கிறான்.

அடுத்து, ஜமீன்தாரை வாழ்த்திப் பாடி உதவி பெறும் ஏழைப் புலவர் மகளை (செந்தாமரை) காளிங்கன் மூலம் கடத்தி, ஜமீன்தார் சீரழித்துவிட்டதை அறியும் லிங்கன், புலவரிடமும் மக்களிடமும் உண்மையை எடுத்துச் சொல்லி, அவர்களை அழைத்துச்செல்லும்போது, கோயிலில்





படங்கள் உதவி : ஞானம்

ஆனால், உண்மையை அறிந்த சொக்கலிங்கமோ, ஜமீன்தாரின் மண்டையை உடைத்து விட்டு, அங்கிருந்து தப்பி ஓடிப்போகிறான். ஜமீன்தாரின் ஆட்களிடமிருந்து தப்பிக்கும் சொக்கலிங்கனை, டேவிட் துரை என்பவர் காப்பாற்றி, தன்னுடன் அழைத்துச்சென்று வளர்த்து, படிக்கவைத்து ஆளாக்கி, லிங்கன் எனும் பெயருடன் ஜமீன்தாரிடமே செகரட்டரி வேலைக்கு அனுப்பிவைக்கிறார்.

செகரட்டரி லிங்கனைக் காதலிக்கும் ஜமீன்தார் மகள் உமா, திருமணத்திற்கு முன்பாகவே கர்ப்பமாகிறார். தனது ஜாதி அந்தஸ்து ஆணவம் எல்லாவற்றையும் வேறு வழியில்லாமல் ஒதுக்கி வைத்துவிட்டு லிங்கனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்துவைக்க ஜமீன்தார் சம்மதிக்கிறார். ஆனால், திருமண மேடையில் லிங்கன், தான் வேறு யாரும் அல்ல, ஜமீன்தாரின் வண்டிக்காரனான சடையனின் மகன் சொக்கலிங்கம் என்கிற உண்மையைச் சொல்கிறான்.

ஏழையான எனக்கு, உங்கள் மகளை இப்போது திருமணம் செய்து தர சம்மதமா என்று ஊரார் முன்னால் கேட்டு, ஜமீன்தாரின் சாதி வெறியையும் ஆணவத்தையும் அம்பலப்படுத்த முயல்கிறான். ஆனால், ஜமீன்தார் ஜம்புலிங்கம் இதையே தனக்கு சாதகமாக்கி, 'எனது கொள்கையே சமதர்மம்'தான். அதனால் வண்டிக்காரனை எனக்குச் சம்பந்தி ஆக்கிக்கொள்கிறேன்' என்று சொல்லி,

> **தன்னைக் காப்பாற்றச்சொல்லி லிங்கனிடம் கெஞ்சுகிறார். செய்த தவறுகளை எல்லாம் மக்கள் முன் ஒப்புக்கொண்டு தண்டனை பெறவும் தயாராகிறார்.**

புலவரின் மகள் மணமகளாகத் திருமணக் கோலத்தில் அமர்ந்து இருப்பது கண்டு புலவரும் சடையனும் ஊர் மக்களும் ஜமீன்தாரை வாழ்த்துவதுடன் லிங்கனைத் திட்டுகின்றனர்.

### பழிதீர்க்கும் படலம்

இறுதியாகத் தனது அம்மாவை காளையின் மீது தள்ளிவிட்டு ஜமீன்தார் கொலை செய்ததைப் போல, ஜமீன்தாரையும் கொல்வதற்காக, வேலையாள் கண்ணாயிரமும் (காக்கா ராதாகிருஷ்ணன்) சேர்ந்து, ஒரு காளைக்குப் பயிற்சி கொடுத்து வளர்க்கின்றனர். அதைக் காணும் ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதி, மரகதத்தின் மகள் கோகிலாவுக்கும் லிங்கனுக்கும் தவறான உறவுள்ளதாகத் தன் மகள் உமாவை நம்பவைத்து கணவனையும் மனைவியையும் பிரித்து, தனது மகள் உமாவை ஜமீன் மாளிகைக்கு அழைத்து வந்துவிடுகிறார்.

அந்தக் காளையையும் லிங்கனையும் அவர்கள் வாழும் குடிசை வீட்டையும் காளிங்கன் மூலம் கொளுத்திவிடுகிறார். தீ விபத்தில் லிங்கனின் குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் மரகதத்தின் மகள் கோகிலா இறந்துபோகிறாள். இதனால் ஆத்திரப்படும் மரகதம், ஜமீன்தார் பற்றிய அனைத்து உண்மைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்கிறாள். ஆத்திரப்படும் மக்கள் நெருப்பு வைத்த காளிங்கனை எரியும் நெருப்புக்குள் தூக்கி வீசுகின்றனர்.

லிங்கன், பழிதீர்ப்பதற்காக ஜமீன்தாரைத் தேடிப் போகிறான். அங்கு ஜமீன்தார் போதையில் நடன மங்கையுடன் உல்லாசமாக ஆடிப் பாடிக்கொண்டிருக்கிறார். லிங்கனின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடிவரும் ஜமீன்தார், காளைமாட்டிடம் மாட்டிக்கொள்கிறார். தன்னைக் காப்பாற்றச் சொல்லி லிங்கனிடம் கெஞ்சுகிறார். செய்த தவறுகளை எல்லாம் மக்கள் முன் ஒப்புக்கொண்டு தண்டனை பெறவும் தயாராகிறார். இறுதியில், தனது தந்தையைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் உமாவும் லிங்கனுடன் மீண்டும் சேர்வதுடன் படம் நிறைவடையும்.

...காட்சி விரியும்

---

## தி.மு.க. தரும் வாக்குறுதி, வெறும் வார்த்தையல்ல!

தி.மு.கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு, எதிராகப் பலமான கூட்டணியை அமைக்க முடியாமல் திணறி வரும் எதிர்க்கட்சிகள், தி.மு.க. அமைத்துள்ள தேர்தல் அறிக்கைக் குழுவைக் கண்டு பதற்றம் அடைந்திருக்கிறார்கள். 'பூனை கண்ணை மூடிக்கொண்டால், பூலோகமே இருண்டுவிட்டதாக நினைத்துக்கொள்ளுமாம்' என்ற பழமொழி போல கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆகின என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

அவர்களுக்குப் பதிலளித்துள்ள கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி, "தி.மு.க. அரசு மொத்தம் 505 வாக்குறுதிகளை அளித்தது. அவற்றில் 404 வாக்குறுதிகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள வாக்குறுதிகளில் 40 திட்டங்கள் தற்பொழுது அரசின் பரிசீலனையில் (Consultation) உள்ளன. சுமார் 37 திட்டங்கள் ஒன்றிய அரசின் நிதியுதவி மற்றும் அனுமதிக்காகக் காத்திருப்பதால், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிதி நிலைமை காரணமாக 64 திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்த முடிய வில்லை" என வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் சட்டமன்றத்தில் மொத்தம் 8,635 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்த 8,635 அறிவிப்புகளில் 4,516 திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மற்றும் 3,455 திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சுமார் 256 திட்டங்கள் (சுமார் 3%) நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளன" என்று ஆதாரங்களோடு பதிவிட்டுள்ளார்.

'ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை, வெளிநாட்டில் இருந்து கருப்புப் பணத்தை மீட்டு நாட்டு மக்கள் வங்கிக் கணக்கில் தலா 15 லட்சம் ரூபாய் வரவு வைப்போம்' என்பதைப் போல 2014-இல் பா.ஜ.க. கொடுத்த உருட்டுகள் அல்ல, தி.மு.க. தரும் வாக்குறுதிகள்.

---

## ஃப்ளாஷ்பேக்



### வாழ்நாள் மகிழ்ச்சி!



எஸ்.பார்த்திபன்

2012-ஆம் ஆண்டு, அன்றைய அ.தி.மு.க. அராஜக ஆட்சியைக் கண்டித்து, அன்றைய சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர், மறைந்த அண்ணன் ஜெ.அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில், சிறை நிரப்பும் போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், தன் கரங்களால் கழகத் துண்டை அணிவித்து, வாழ்த்திய மகிழ்ச்சியான தருணம். போராட்டத்தில் கலந்துகொண்டு, அதற்காகத் தலைவரிடம் வாழ்த்துப் பெற்றது வாழ்நாள் மகிழ்ச்சி.

**– எஸ்.பார்த்திபன், துணை அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி, மயிலை மேற்குப் பகுதி, தென் சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## நறுக்கு

### தேர்தல் நிதியும் 'காகிதப் பூ' நாடகமும்!

1966-ஆம் ஆண்டு, அண்ணா பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது, அரங்கேற்றம் கண்ட கலைஞரின் 'காகிதப்பூ' நாடகம், பெரும் வரவேற்பைப் பெற்றது. அதையடுத்து, தேர்தல் நிதி திரட்டும் பணியாகத் தமிழ்நாடு முழுவதும் காகிதப்பூ நாடகம் நடத்த முடிவு செய்தார் கலைஞர். அதற்கடுத்த நான்கு மாதங்களில், அந்த நாடகத்தின்மூலம் ஐந்து லட்சம் ரூபாய் தேர்தல் நிதி திரட்டியிருந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131